**DEPOSITION OF WITNESS**
**(Chapter XX III Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1**
**RAMANATHAPURAM**
**CASE NO: C.C. 34 /2020**
**Deposition of witness for prosecution -PW-4**

| | | |
|---|---|---|
| Name | : | திரு.முனீஸ்வரன் |
| Father Name | : | திரு.வடிவேல் |
| Village | : | பூத்தோண்டி |
| Taluk | : | இராமநாதபுரம் |
| Calling | : | சென்ட்ரிங் |
| Religion | : | இந்து |
| Age | : | 41 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the 11th day of August 2022.

முதல் விசாரணை:

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். அ.சா.1 மற்றும் விபத்தில் இறந்துபோன சதீஸ்குமார் என்பவரை தெரியும். 2 வருடங்களுக்கு முன்பு சதீஸ்குமார் வாகன விபத்தில் இறந்துபோனதாக காளியம்மாள் என்பவர் எனக்கு தகவல் சொன்னார். அப்போது நான் பொன்குளத்தில் இருந்தேன். கேள்விபட்டவுடன் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். சதீஸ்குமார் என்பவர் இறந்துவிட்டதாக கூறினார்கள். போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

(அரசு தரப்பு சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி கு.வி செய்ய அனுமதி வேண்டப்பட்டது. சாட்சியத்தின் வாக்குமூலத்தை பரிசீலனை செய்து இந்தியசாட்சிய சட்டப்பிரிவு 154ன் படி அனுமதி வழங்கப்பட்டது.)

<u>அரசு தரப்பில் கு.வி</u>

நானும், முருகேசனும் மாதவனூர் தேவிபட்டிணம் ரோட்டில் நின்று கொண்டிருந்தபோது எதிரி டிராக்டரை ஓட்டி வந்து சதீஸ்குமார் என்பவர் இருசக்கர வாகனத்தில் காளியம்மாள், நாகஜோதி ஆகியோர்களை ஏற்றி வந்து கொண்டிருந்த போது எதிரே இன்னோவா கார் ஓட்டிவந்த எதிரி அவர்கள் மீது மோதி அதில் சதீஸ்குமார் இறந்துவிட்டார் அந்த சம்பவத்தை நேரில் பார்த்ததாக நானும், முருகேசனும் அவர்களை

108 ஆம்புலன்ஸ் மூலம் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாக போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது சம்பவம் நடந்தபோது நான் பொன்குளத்தில்இருந்ததாகவும், போலிசார் என்னை விசாரணை செய்யததாகவும் கூறிவிட்டு, தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

(ஒப்பம்/- எம். சிட்டிபாபு)
நீதித்துறை நடுவர் எண்.1
இராமநாதபுரம்

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XX III Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1**
**RAMANATHAPURAM**
**CASE NO: C.C. 34 /2020**
**Deposition of witness for prosecution -PW-5**

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி.ரேகா |
| Husband Name | : | திரு.சதீஸ்குமார் |
| Village | : | பூத்தோண்டி |
| Taluk | : | இராமநாதபுரம் |
| Calling | : | ஸ்கேன் சென்டர் |
| Religion | : | இந்து |
| Age | : | 34 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the 11th day of August 2022.

முதல் விசாரணை:

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். அ.சா.1 எனது உறவினர். வாகன விபத்தில் இறந்துபோன சதீஸ்குமார் என் கணவர். 13.06.2019ம் தேதி எனது கணவர் தேவிப்பட்டிணம் செல்லும் பொழுது விபத்து ஏற்பட்டதாக நான் வீட்டில் இருந்தபோது தகவல் சொன்னார்கள். கேள்விபட்ட நான் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். அவர் இறந்து விட்டதாக கூறினார்கள். அவர் மீது கார் வந்து மோதியதாக சொன்னார்கள். போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

எதிரி தரப்பில் கு.வி

எனது கணவருக்கு இருசக்கர வாகனம் சரியாக ஓட்ட தெரியாது என்றால் சரிதான். எனது தம்பி, என் கணவருக்கு வாகனம் ஓட்ட கற்றுக்கொடுத்து கொண்டிருந்தார். அ.சா.4 என் உறவினரா என்றால் இல்லை. என் ஊர்க்காரர். என் கணவருக்கு விபத்து ஏற்பட்டது எவ்வாறு என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். கேள்விபட்டு தான் நான் மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன் என்றால் சரிதான்.

(ஒப்பம்/- எம். சிட்டிபாபு)

நீதித்துறை நடுவர் எண்.1
இராமநாதபுரம்

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XX III Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1**
**RAMANATHAPURAM**
**CASE NO: C.C. 34 /2020**
**Deposition of witness for prosecution -PW-6**

| | | |
|---|---|---|
| Name | : | திரு.ராமு |
| Father Name | : | திரு.காராச்சு |
| Village | : | பூத்தோண்டி |
| Taluk | : | இராமநாதபுரம் |
| Calling | : | கூலி வேலை |
| Religion | : | இந்து |
| Age | : | 72 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the 11th day of August 2022.

முதல் விசாரணை:

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். வாகன விபத்தில் இறந்து போன சதீஸ்குமார் என்பவர் எனக்கு யார் என்று தெரியாது. அ.சா.1 நாகஜோதியை எனக்கு தெரியும். தற்போது என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் புகாரில் அறிவியல் சாட்சியாக உள்ள கையொப்பம் என்னுடையது தான். அது அ.த.சா.ஆ.2 ஆகும். அடக்கம் செய்வதற்காக என்னிடத்தில் கையொப்பம் கேட்டார்கள். நான் போட்டேன். போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

(அரசு தரப்பு சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி கு.வி செய்ய அனுமதி வேண்டப்பட்டது. சாட்சியத்தின் வாக்குமூலத்தை பரிசீலனை செய்து இந்தியசாட்சிய சட்டப்பிரிவு 154ன் படி அனுமதி வழங்கப்பட்டது.)

<u>அரசு தரப்பில் கு.வி</u>

கடந்த 3 வருடங்களுக்கு முன்னால் ஒரு விபத்து ஏற்பட்டது என்றும், கேள்விபட்ட நான் மருத்துவமனை சென்று பார்த்தேன் என்றும், அந்த விபத்து சம்மந்தமாக அ.சா.1 காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றும், அதில் நான் அறிவியல் சாட்சியாக கையொப்பம் போட்டதாக போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது அடக்கம் செய்வதற்காக கையொப்பம் போட்டதாகவும், போலிசார் என்னை விசாரணை

செய்யவில்லை என்று எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

(ஒப்பம்/- எம். சிட்டிபாபு)

நீதித்துறை நடுவர் எண்.1
இராமநாதபுரம்